# மனப்பாடச் செய்யுள்

## தன்னேர் இலாத தமிழ்

இயல் – 1

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

**பா வகை : நேரிசை வெண்பா**
**அணி : பொருள் வேற்றுமை அணி**

**– தண்டி**

செப். 2020; முதல் தி.தேர்வு 2022

## நெடுநல்வாடை

இயல் – 2

‘வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையுஉ நடுங்க

**பாவகை : நேரிசை ஆசிரியப்பா**

**– நக்கீரர்**

அ.மா.வி 2019; பிடிஏ–3

## கம்பராமாயணம்

இயல் – 3

2. ‘துன்பு உளதுஎனின் அன்றோ
 சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
 பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
 முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
 ஐவர்கள் உளர் ஆனோம்.

**பாவகை : கலிவிருத்தம்**

பிடிஏ–1; காலாண்டுத் தேர்வு 2019; மார்ச் 2020

9. குகனோடும் ஐவர் ஆனேம்
 முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
 எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
 நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
 புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

**பா வகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu
www.surabooks.com



## திருக்குறள்

### இல்வாழ்க்கை

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
 பண்பும் பயனும் அது.

3. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
 தெய்வத்துள் வைக்கப் படும். ஆக. 2021

### செய்ந்நன்றி அறிதல்

4. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
 வானகமும் ஆற்ற லரிது. மே 2022

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது பிடிஏ–2
 அன்றே மறப்பது நன்று.

9. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
 செய்ந்நன்றி கொன்ற மகற்கு. பிடிஏ–4,6

### வெஃகாமை

12. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
 வேண்டும் பிறன்கைப் பொருள்.

### வெகுளாமை

15. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
 பிறத்தல் அதனான் வரும்.

17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
 தன்னையே கொல்லும் சினம். அ.மா.வி, காலாண்டுத் தேர்வு 2019

18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
 ஏமப் புணையைச் சுடும். முதல் தி.தேர்வு 2022; ஜுலை–2022

### ஊழ்

19. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன் பிடிஏ–5
 உண்மை அறிவே மிகும்.

– திருவள்ளுவர்

## இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
 வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
 மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு; மே 2022
 புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
 கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

பா வகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

– சுரதா



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu
www.surabooks.com



## புறநானூறு

இயல் - 4

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

அரையாண்டுத் தேர்வு 2019

பாவகை : நேரிசை ஆசிரியப்பா, திணை : பாடாண்

- ஔவையார்

## தெய்வமணிமாலை

இயல் - 5

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

பிடிஏ–2, ஆக. 2021

இரண்டாம் தி.தேர்வு 2022

பாவகை : பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

- இராமலிங்க அடிகள்

## சிலப்பதிகாரம்

இயல் - 6

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை.

பிடிஏ–5 ; ஜூலை–2022

பாவகை : ஆசிரியப்பா

- இளங்கோவடிகள்

## திருக்குறள்

### அறிவு உடைமை

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. பிடிஏ–1, 3; அரையாண்டுத் தேர்வு 2019

5. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய். செப். 2020

### சிற்றினம் சேராமை

7. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

- திருவள்ளுவர்

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu
www.surabooks.com



## திருக்குறள்

### வினைத்திட்பம்

8. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

மார்ச் 2020
இரண்டாம் தி.தேர்வு 2022

11. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

### தூது

12. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

### உட்பகை

15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

### சூது

20. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

– திருவள்ளுவர்

## புறநானூறு

இயல் – 7

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

பாவகை : நேரிசை ஆசிரியப்பா, திணை : பாடாண்

– பிசிராந்தையார்

## இரட்சணிய யாத்திரிகம்

இயல் – 8

2. பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

பிடிஏ–4, 6

பாவகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

– எச்.ஏ. கிருட்டிணனார்

## சிறுபாணாற்றுப்படை

இயல் – 8

இவர்களோடு நல்லியக்கோடன்
................ என ஆங்கு
எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள்.

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

– நல்லூர் நத்தத்தனார்

www.surabooks.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu
www.surabooks.com

# 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுக்கான தமிழ் உரைநூல்

**நம்மை அளப்போம் (புத்தக வினா)** | **பலவுள் தெரிக** | **1 மதிப்பெண்**

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்** ஜூலை 2022
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல் **விடை: இ) தொல்காப்பியம்**

2. **"மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்** பிடிஏ–1; ஜூலை 2022
அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை **விடை: இ) அடிஎதுகை, சீர்மோனை**

3. **கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.** பிடிஏ–5, ஆக.2021
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு **விடை: இ) இரண்டு கருத்தும் சரி**

4. **பொருத்துக.** பிடிஏ–2; காலாண்டுத் தேர்வு 2019
அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர்
ஆ) நிலவுப்பூ - 2) தி.சு.நடராசன்
இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்
ஈ) உய்யும் வழி - 4) கி.ராஜநாராயணன்
அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1 **விடை: ஈ) 2, 3, 4, 1**

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

5. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்** பிடிஏ–4
அ) ஒளிப்பறவை ஆ) ஒரு கிராமத்து நதி இ) சூரிய நிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி
**விடை: ஆ) ஒரு கிராமத்து நதி**

6. **தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்?** பிடிஏ–6
அ) பாடி ஆ) சீறி இ) கூவ ஈ) ஆடி **விடை: அ) பாடி**

7. **சிற்பி பாலசுப்பிரமணியம் பாரதியார் பல்கலைக்கழகத்தில் ......... துறைத் தலைவராகப் பணியாற்றினார்.** காலாண்டுத் தேர்வு 2019
அ) தமிழ் ஆ) வரலாறு இ) ஆங்கிலம் ஈ) பொருளாதாரம் **விடை: அ) தமிழ்**

8. **சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம் பெற்ற நூல் :** மார்ச் 2020
அ) மஸ்னவி ஆ) நிலவுப் பூ இ) காவ்யதர்சம் ஈ) துறைமுகம் **விடை: ஆ) நிலவுப் பூ**

9. **"மீண்டுமந்தப் பழமை நலம் புதுக்குதற்கு"
மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா! என்று கூறியவர்.** முதல் தி.தேர்வு 2022
அ) பரலி சு. நெல்லையப்பர் ஆ) தி.சு. நடராசன்
இ) சிற்பி பாலசுப்ரமணியம் ஈ) ராஜ நாராயணன் **விடை: இ) சிற்பி பாலசுப்ரமணியம்**

10. **"தமிழ்க்குயிலே! கூவி வா, வா!" எனக் கூறியவர் :** மே 2022
அ) சிற்பி பாலசுப்ரமணியம் ஆ) பாரதியார்
இ) சுரதா ஈ) பாரதிதாசன் **விடை: அ) சிற்பி பாலசுப்ரமணியம்**

11. **'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்' என்னும் விதிக்கான சான்று** அ.மா.வி 2019
அ) ஆங்கவற்றுள் ஆ) எத்திசை
இ) வெங்கதிர் ஈ) பூம்பாவாய் **விடை: அ) ஆங்கவற்றுள்**



enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu
www.surabooks.com



**12. அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூல்** முதல் தி.தேர்வு & மே 2022

அ) தொல்காப்பியம் ஆ) தண்டியலங்காரம்
இ) வீரசோழியம் ஈ) முத்து வீரியம்

**விடை: ஆ) தண்டியலங்காரம்**

**13. வெங்கதிர் - இலக்கணக்குறிப்பைக் கண்டறி.** ஆக. 2021; முதல் தி.தேர்வு 2022

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

**விடை: அ) பண்புத்தொகை**

**14. 'ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழ விளங்கி' என்னும் பாடலில் பயின்று வந்துள்ள பாவகை:** முதல் தி.தேர்வு 2022

அ) ஆசிரியப்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) நேரிசை வெண்பா

**விடை: ஈ) நேரிசை வெண்பா**

**15. 'வெங்கதிர்' என்னும் சொல்லின் பொருள் :** முதல் தி.தேர்வு 2022

அ) ஒளிர்கின்ற கதிரவன் ஆ) நிகரில்லாத தமிழ்
இ) பொதிகை மலை ஈ) புறஇருள்

**விடை: அ) ஒளிர்கின்ற கதிரவன்**

**16. 'பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே' என்னும் தொடர் இடம் பெற்றுள்ள நூல் :** முதல் தி.தேர்வு 2022

அ) தண்டியலங்காரம் ஆ) திருக்குறள்
இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

**விடை: ஈ) நன்னூல்**

**17. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது - என்று கடிதம் எழுதியவர்** பிடிஏ–1

அ) நெல்லையப்பர் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்

**விடை: ஆ) பாரதியார்**

**18. பாரதியார், எங்கிருந்து பரலி சு.நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதினார்?** பிடிஏ–3

அ) புதுச்சேரி ஆ) எட்டயபுரம் இ) கடையம் ஈ) சென்னை

**விடை: அ) புதுச்சேரி**

**19. தம்பி நெல்லையப்பருக்கு - கட்டுரையின் ஆசிரியர் :** ஜூலை 2022

அ) பாரதியார் ஆ) உத்தம சோழன் இ) பூமணி ஈ) ஐராவதம் மகாதேவன்

**விடை: அ) பாரதியார்**

**20. உயிரெழுத்துகள் .................. வகைப்படும்.** பிடிஏ–2

அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) இரண்டு

**விடை: ஈ) இரண்டு**

**21. பிழையற்ற தொடரைத் தேர்ந்தெடுக்க :** செப்–2020

அ) உங்களில் யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?
ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?
இ) உங்களை யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?
ஈ) உங்களது யாருக்கு நன்மை என நினைக்கிறீர்கள்?

**விடை: ஆ) உங்களுக்கு யாரால் நன்மை என நினைக்கிறீர்கள்?**

## நம்மை அளப்போம் [புத்தக வினா] | குறுவினா | 2 மதிப்பெண்கள்

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

காலாண்டுத் தேர்வு 2019; ஆக. 2021; முதல் தி.தேர்வு & ஜூலை 2022

(i) 'நடைபெற்றியலும்' (கிளவியாக்கம், 26) என்றும் 'நடைநவின்றொழுகும்' (செய்.135) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.

(ii) 'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
வெண்பா நடைத்தே கலி' (செய். 107)
என்றும் சொல்லுகிறது; 'கவிதையின் இயங்காற்றல்தான் நடை' எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu
www.surabooks.com



**2. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

அ.மா.வி 2019; மார்ச் 2020; ஆக. 2021; முதல் தி.தேர்வு & ஜுலை 2022

(i) கடினமான வேலைகளைச் செய்யும் தொழிலாளர்களின் கைகள், மாலை நேரத்தில் சூரியனின் செந்நிறக் கதிர்களால் சிவந்திருக்கிற வானத்தைப் போல் சிவந்து காணப்படும்.

(ii) தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம் அவர்களின் பருத்த தோள் மீது முத்துகள் சிதறியது போன்று காணப்படும். இவற்றையெல்லாம் வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்று கவிஞர் சிற்பி கூறுகிறார்.

## பிடிஏ மற்றும் அரசு தேர்வு வினா - விடைகள்

**1. "முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்" - யார், யாரைப் பற்றி கூறியது?** பிடிஏ–5

சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ்த்தாயைப் பற்றிக்கூறியது.

**2. விடியல், பனிநீர் - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடரமைக்க.** முதல் தி.தேர்வு 2022

விடியற்காலையில் எழுந்து, புல்லின் மீது உள்ள பனிநீரைக் கண்டு ரசித்தேன்.

**3. மொழியின் இயல்புவழக்குகளைக் கலை வழக்குகளாக மாற்றுபவை எவை?** மே 2022

(i) உவமம் (ii) உருவகம் (iii) எச்சம் (iv) குறிப்பு (v) உள்ளுறை (vi) இறைச்சி

**4. தமிழ் எத்தகைய வலிமை வாய்ந்தது?** பிடிஏ–3

வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது தமிழ்.

**5. தமிழ்மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை?** பிடிஏ–6

பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புமை இல்லாததுமாக விளங்குகின்ற தமிழ்மொழியானது கடலால் சூழப்பட்ட உலகின் புற இருளைப் போக்கும் சூரியனை விட உயர்ந்தது; தனக்கு நிகரில்லாமல் விளங்குவது ஆகும்.

**6. தண்டியலங்காரம் எவ்வகை நூல்?** அரையாண்டுத் தேர்வு 2019

தண்டியலங்காரம் அணி இலக்கணத்தைக் கூறும் நூல்.

**7. தண்டியலங்காரம் - குறிப்பெழுதுக.** அரையாண்டுத் தேர்வு 2019; முதல் தி.தேர்வு 2022

அணியிலக்கணத்தைக் கூறும் நூல்களுள் தண்டியலங்காரம் ஒன்றாகும். இந்நூல் காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டதாகும். இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று பிரிவுகளை உடையது.

**8. எழுதும் போது ஏற்படும் பிழைகள் யாவை?** பிடிஏ–1

**எழுதும் போது ஏற்படும் பிழைகள்:**

(i) எழுத்துப்பிழை (ii) சொற்பொருட்பிழை (iii) சொற்றொடர்ப் பிழை (iv) பொதுவான பிழைகள் சில

**9. பேச்சு வழக்கை எழுத்து வழக்கமாக மாற்றுக.** பிடிஏ–1, முதல் தி.தேர்வு 2022

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும். **விடை:** அவருக்கு நன்மையும் தீமையும் நன்றாகத் தெரியும்.

ஆ) வறட்சி எல்லா இடத்தையும் பாதித்துள்ளது. **விடை:** வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com